**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

முன்னிலை : **திரு. மா.சந்திரமோகன், பி.ஏ., பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி

திருவள்ளுவர் ஆண்டு 2057 பராபவ வருடம் ஆனித் திங்கள் 04–ம் நாள்

2026–ம் ஆண்டு ஜூன் மாதம் 18–ம் நாள் வியாழக்கிழமை

*******

**அசல் வழக்கு எண். 213/2019**

**CNR.No.TNMY07-000325-2019**

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி டி.மு.கோர்ட் அதிகார வரம்பிற்குட்பட்ட, சீர்காழி தாலுக்கா, 62.பெருமங்கலம் என்ற முகவரியில் வசித்து வரும் சுமார் 45 வயதுள்ள லேட் இளங்கோவன் மனைவி சகுந்தலா. **...வாதி**

**...எதிர்**...

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி டி.மு.கோர்ட் அதிகார வரம்பிற்குட்பட்ட, சீர்காழி தாலுக்கா, திருப்புங்கூர் – அஞ்சல், 62.பெருமங்கலம் என்ற முகவரியில் வசித்து வரும் முனியன் குமாரர் சுமார் 64 வயதுள்ள மகாராஜன். **...பிரதிவாதி**

வழக்கு சொத்துக்களைப் பொறுத்து வாதி அமைதியான முறையில் அனுபவிப்பதை பிரதிவாதியோ, அவரது ஆட்களோ, முகவர்களோ, எவ்வித தடையும், இடையூறும் செய்யாமலிருக்க நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்க கோரியும், செலவுத்தொகை கோரியும், இவ்வழக்கு வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| இவ்வழக்கு தாக்கலான நாள் | 19.10.2019 |
| இவ்வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | 19.10.2019 |
| இவ்வழக்கின் வழக்கு மூலம் ஏற்பட்ட நாட்கள் மற்றும் இடம் | 29.08.2019, 30.08.2019, 20.09.2019, 23.09.2019 ஆகிய தேதிகளில் திருப்புங்கூர் கிராமத்தில் வழக்கு மூலம் எழுந்துள்ளது. |
| இவ்வழக்கின் பொருமானம் மற்றும் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் | வழக்கு சொத்துக்களைப் பொறுத்து வாதி அமைதியான முறையில் அனுபவிப்பதை பிரதிவாதியோ, அவரது ஆட்களோ, முகவர்களோ, எவ்வித தடையும், இடையூறும் செய்யாமலிருக்க நிரந்தர |

| | |
|---|---|
| | உறுத்துக் கட்டளை பரிகாரம் பெற வாதியின் பொறுமானம் ரூ.1,000/- என நிர்ணயம் செய்யப்பட்டு, அதற்கு நீதிமன்றக் கட்டணமாக ரூ.30/- நீ.ம.க.ச பிரிவு 27(c) படி செலுத்தப்பட்டுள்ளது. |

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 16.06.2026 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S. முத்துக்குமார் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S. சுவாமிநாதன் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரை, ஆவணங்கள், சாட்சியங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**தீர்ப்பாணை**

1. இவ்வழக்கானது தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.
2. தரப்பினர்களின் உறவுமுறையை கருத்தில் கொண்டு செலவுத்தொகை இல்லை.

**சொத்து விபரம்**

மயிலாடுதுறை பதிவு மாவட்டம், சீர்காழி சார்பதிவகம் திருப்புங்கூர் வட்டத்தில்,

1. நஞ்சை புல எண் 32/1-ல் 0.95 செண்ட்

**நான்கெல்லைகள்:**

மயிலாடுதுறை ரமேஷ் நஞ்சைக்கு மேற்கு, பஞ்சநாதன் சாகுபடிக்கு வடக்கு, பாஸ்கரன் நஞ்சைக்கு கிழக்கு, வாய்க்காலுக்கு தெற்கு,

2. நஞ்சை புல எண் 28/1-ல் 25 செண்ட்

**நான்கெல்லைகள்:**

நரிமுடுக்கு சாலை வடக்கு, சச்சினாந்தம் குடியிருப்பு மனைக்கு மேற்கு, பாஸ்கரன் நஞ்சைக்கு தெற்கு, வைத்தியநாதசாமி நஞ்சை (பாலு சாகுபடி நஞ்சைக்கு) கிழக்கு.

**வாதி, பிரதிவாதி தரப்பில் செலவுத்தொகை பட்டியல் விபரம் தாக்கல் செய்யப்படவில்லை.**

2026-ம் ஆண்டு ஜூன் மாதம் 18ம் நாள் என் கையொப்பம் இந்நீதிமன்ற முத்திரையுடன் இடப்பட்டது.

(ஒம்/- மா. சந்திரமோகன்)

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சீர்காழி.**

**தீர்ப்பாணை**

அசல் வழக்கு எண்.213/2019
நாள்.18.06.2026.